புழலில் சமுதாயக் கூடம்: அமைச்சர் ஆய்வு

சென்னை, ஜூலை 15: புழல் ஊராட்சி ஒன்றியத்தில் சமுதாயக் கூடம் கட்டப்படவுள்ள இடத்தை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு ஆய்வு செய்தார்.

சென்னையில் பெருநகர வளர்ச்சிப் பணிக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மார்ச் 14-ஆம் தேதி வடசென்னையில் 219 பணிகளுக்கு சுமார் ரூ.4378 கோடியில் நிதி ஒதுக்கி இருந்தார்.

தற்போது நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து பெரம்பூர், ஆர்.கே.நகர், திருவொற்றியூர், புழல்-விளாங்காடுபாக்கம், வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசுகையில், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில் 219 பணிகளில் 100 பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

100-க்கும் மேற்பட்ட பணிகள் தொடங்கப்பட்டு விரைவில் அனைத்து பணிகளும் முடிந்து, மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றார் அவர்.

இந்த ஆய்வில் சென்னை மாநகர மேயர் பிரியா, சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலரும், மாதவரம் சட்டப்பேரவை உறுப்பினருமான எஸ்.சுதர்சனம், வடசென்னை மக்களவை உறுப்பினர் கலாநிதி வீராசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் காகர் லா உஷா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

ஆடி மாத அம்மன் கோயில்களுக்கான முதல்கட்ட ஆன்மிகப் பயணம்

சென்னை, ஜூலை 15: மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் ஆடி மாத அம்மன் கோயில்களுக்கான முதல்கட்ட ஆன்மிகப் பயணம் ஜூலை 19-ஆம் தேதி தொடங்கப்படும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தகவல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நிகழ் நிதியாண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், 'ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவ கோயில்களுக்கும் வயது மூப்பின் காரணமாகவும், பொருளாதார வசதியின்மை காரணமாகவும், இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதுக்குள்பட்ட, தலா 1,000 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுவர்.

ஜூலை19-இல் தொடக்கம்

இதற்கான செலவினத் தொகை ரூ.50 லட்சம் அரசு நிதியாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களை தலைமையிடமாக கொண்டு புகழ் பெற்ற அம்மன் கோயில்களுக்கு ஆடி மாதத்தில் 1,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்ல அறிவிப்பு வெளியிடப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த மண்டலங்களில் ஜூலை 17-ஆம் தேதிக்குள் திரும்ப வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, மூத்த குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. ஆடி மாத அம்மன் கோயில் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்கள் சென்னை மண்டலத்தில் மயிலாப்பூர், கற்பகாம்பாள் கோயில், பாரிமுனை காளிகாம்பாள் கோயில், திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோயில், மாங்காடு காமாட்சியம்மன் கோயில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கும்; திருச்சி மண்டலத்தில் உறையூர் வெக்காளியம்மன் கோயில், உறையூர் கமல வள்ளி நாச்சியார் கோயில், திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், சமயபுரம் உஜ்ஜையினி மாகாளியம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவர்.

அதேபோன்று மதுரை மண்டலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயில், வண்டியூர் மாரியம்மன் கோயில், மடப்புரம் காளியம்மன் கோயில், அழகர்கோவில், ராக்காயியம்மன் கோயில், சோழவந்தான் ஜனக மாரியம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கும்; கோயம்புத்தூர் மண்டலத்தில் கோயமுத்தூர் கோனியம்மன் கோயில், பொள்ளாச்சி மாரியம்மன், அங்காளம்மன் கோயில், ஆனைமலை மாசாணியம்மன் கோயில், சூலக்கல் மாரியம்மன் கோயில், கோயமுத்தூர் தண்டுமாரியம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கும், தஞ்சாவூர் மண்டலத்தில் தஞ்சாவூர் பெரியகோயில் வராகியம்மன் கோயில், தஞ்சாவூர் பங்காரு காமாட்சியம்மன் கோயில், புன்னைநல்லூர், மகா மாரியம்மன் கோயில், திருக்கருகாவூர் கர்ப்பக ரட்சாம்பிகை கோயில், பட்டீஸ்வரம் துர்கையம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கும்; திருநெல்வேலி மண்டலத்தில் கன்னியாகுமரி பகவதியம்மன் கோயில், முப்பந்தல், இசக்கியம்மன் கோயில், சுசீந்திரம் ஒன்னுவிட்ட நங்கையம்மன் கோயில், மண்டைக்காடு பகவதியம்மன் கோயில், குழித்துறை சாமுண்டியம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

ஆடி மாத அம்மன் கோயில் முதல்கட்ட ஆன்மிகப் பயணமானது 6 மண்டலங்களில் வரும் 19-ஆம் தேதி தொடங்குகிறது. இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு சிறப்பு தரிசனத்துடன் உணவு, பயணவழிப் பை மற்றும் அந்தந்த கோயில்களின் பிரசாதங்களும் வழங்கப்படுகின்றன.

மேலும், அவர்களுக்கு உதவியாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் செல்கின்றனர் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

பள்ளிக் கல்வித் துறையில் 9 இணை இயக்குநர்கள் இடமாற்றம்

சென்னை, ஜூலை 15: தமிழக பள்ளிக் கல்வி பணியில் இணை இயக்குநர்கள் 9 பேருக்கு நிர்வாக நலன் கருதி இடமாறுதல் அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறைச் செயலர் ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது: தமிழக பள்ளிக் கல்விப் பணியில் இணை இயக்குநர்கள் 9 பேருக்கு நிர்வாக நலன் கருதி இடமாறுதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம்: தொடக்கக் கல்வி இணை இயக்குநர் ச.சுகன்யா மாற்றப்பட்டு, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநராக நியமிக்கப்படுகிறார். பள்ளிக்கல்வி இயக்ககத்தில் மேல்நிலைக்கல்வி இணை இயக்குநராக பணியாற்றும் ச.கோபிதாஸ் இடமாற்றம் செய்யப்பட்டு, தொடக்கக்கல்வி இணை இயக்குநராக (நிர்வாகம்) பணியமர்த்தப்படுகிறார். மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநராக (நிர்வாகம்) உள்ள அ.ஞானகௌரி மாற்றப்பட்டு, பள்ளிக்கல்வி இணை இயக்குநராக (மேல்நிலைக்கல்வி) நியமிக்கப்படுகிறார்.

தொடக்கக்கல்வி இணை இயக்குநரான (அரசு உதவி பெறும் பள்ளிகள்) க.ஸ்ரீதேவி இடமாற்றம் செய்யப்பட்டு, ஆசிரியர் தேர்வு வாரிய இணை இயக்குநராக பணியமர்த்தப்பட்டுள்ளார். தனியார் பள்ளிகள் இணை இயக்குநரான செ.சாந்தி மாற்றப்பட்டு தொடக்கக்கல்வி இணை இயக்குநராக (அரசு உதவி பெறும் பள்ளிகள்) நியமிக்கப்படுகிறார்.

பள்ளிக் கல்வி இணை இயக்குநரான (தொழிற்கல்வி) எம்.ராமகிருஷ்ணன் இடமாற்றம் செய்யப்பட்டு, தனியார் பள்ளிகள் இணை இயக்குநராக பணியமர்த்தப்பட்டுள்ளார். மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரான வெ.ஜெயக்குமார் மாற்றப்பட்டு பள்ளிக்கல்வி இணை இயக்குநராக (தொழிற்கல்வி) நியமிக்கப்படுகிறார்.

ஆசிரியர் தேர்வு வாரிய இணை இயக்குநரான கே.முனுசாமி இடமாற்றம் செய்யப்பளட்டு மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநராக பணியமர்த்தப்பட்டுள்ளார். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மற்றொரு இணை இயக்குநரான ந.ஆனந்தி மாற்றப்பட்டு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இணை இயக்குநராக நியமிக்கப்படுகிறார் என அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

டயாலிசிஸ் மையங்களில் 43,000 பேர் சிகிச்சை

சென்னை, ஜூலை 15: சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் உள்ள டயாலிசிஸ் மையங்கள் மூலம் இதுவரை 43 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர்.

இது குறித்து வள்ளுவர் கோட்டம் டயாலிசிஸ் மைய தலைமை மருத்துவர் கூறியதாவது,

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 2014-ஆம் ஆண்டு 4 டயாலிசிஸ் இயந்திரங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்த மையம் நவீனப்படுத்தப்பட்டு 22 இயந்திரங்களுடன் இயங்கி வருகிறது. இதுவரை வள்ளுவர் கோட்டத்தில் மட்டும் 19, 390 முறை டயாலிசிஸ் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 230 பேர் பயனடைந்துள்ளனர். டயாலிசிஸ் சிகிச்சை பெறுவோருக்கான அனைத்து சோதனையும் இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது. இதுபோன்று சென்னை மாநகராட்சியில் ஈஞ்சம்பாக்கம், திருவொற்றியூர், ரெட்டேரி, இளங்கோ நகர், சின்னப் போரூர், பெருங்குடி, பாடி, செம்மெஞ்சேரி ஆகிய பகுதிகளிலும் இந்த மையம் 119 இயந்திரங்களுடன் இயங்கி வருகிறது.

சிறுநீரக பாதிப்பால் இயற்கையாக ரத்தத்தை சுத்திகரிக்க முடியாத நிலையில் செயற்கை முறையில் சுத்திகரிக்க டயாலிசிஸ் செய்யப்படுகிறது. சராசரியாக நோயாளி ஒருவருக்கு வாரம் இருமுறை ரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது. பொதுமக்கள் தங்கள் பகுதிகளுக்கு அருகில் உள்ள டயாலிசிஸ் மையங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் அவர்.

மகாலிங்கபுரம் ஐயப்பன் கோயிலில் இன்று ஆடி மாத கொண்டாட்டம்

சென்னை, ஜூலை 15: மகாலிங்கபுரம் ஸ்ரீ ஐயப்பன்- குருவாயூரப்பன் கோயிலில் ஆடி மாத கொண்டாட்டங்கள் செவ்வாய்க்கிழமை முதல் தொடங்குகிறது.

தினமும் காலை 5.15 மணிக்கு மஹா கணபதி ஹோமம், 5.30 மணிக்கு சர்வாபிஷேகம், 7.30 மணி முதல் 9 மணி வரை ராமாயண பாராயண வகுப்பு எம்.ஆர்.ஆர். வாரியர், சாந்தா பாலன், பி.என். ஜி.பணிக்கர், ரவீந்திர ராஜா, பேராசிரியர் கிருஷ்ணதாஸ் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

மேலும், ஜூலை 16 முதல் 24-ஆம் தேதி வரை காலை 9 மணிக்கு ஒ.என்.ஜி.சி முன்னாள் இயக்குநர் சி.ஏ.கே.எம். பத்மநாபன் தமிழில் கம்பராமாயண சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு மாளிகைபுரத்து அம்மனுக்கு சந்தன காப்பு, 6.45 மணிக்கு சிறப்பு பூஜை (பகவதி சேவா) நடைபெறும். அதன் பின் 6.45 மணியிலிருந்து 8 மணி வரை லலிதா சஹஸ்ரநாமம் படித்து குங்குமத்தால் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

இந்த சிறப்பு பூஜைகளில் பங்கேற்க www.ayyappatemplesabs.org எனும் இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்து கொள்ளலாம். இது குறித்த கூடுதல் தகவல்களுக்கு 044 28171197, 28172197, 28173197 எனும் தொலைபேசி எண்ணையும், 9444 290 707 எனும் கைப்பேசி எண்ணையும் தொடர்பு கொள்ளுமாறு கோயில் நிர்வாக அதிகாரி அனிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

ஆசியுரை...

சென்னை மயிலாப்பூரில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற வித்யார்த்தி ஹோமம் விழாவில் புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு ஆசியுரை வழங்கிய மாணவர் இல்ல சுவாமி தத்பிரபானந்தர்.

பள்ளி மாணவர்களுக்கு பல் சிகிச்சை முகாம்

சென்னை, ஜூலை 15: சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பல் சிகிச்சை முகாம் திங்கள்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 419 பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் மற்றும் மன நலனை பேணும் வகையில் மருத்துவ முகாம்கள் மற்றும் மன நல ஆலோசனை வழங்கப்படுகிறது.

இந்நிலையில் அண்ணாநகரில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளியில் எம்.கே.மோகன் அறக்கட்டளை மற்றும் சவிதா மருத்துவ கல்லூரி இணைந்து பல்சிகிச்சை முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. இது குறித்து மாநகராட்சி கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது,

மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு பல் சிகிச்சை முகாம் மூலம் பற்களை பாதுகாப்பாக பராமரிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இது வரை 4 பள்ளிகளில் இந்த முகாம் நடத்தப்பட்டுள்ளது. மேலும், 8 பள்ளிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முகாம் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் சுமார் 3,500 மாணவர்கள் பயனடைவர்.

இதுபோன்று மாணவர்களின் உடல் நலனை பாதுகாக்கும் வகையில் அனைத்து பள்ளிகளிலும் சிறப்பு முகாம் நடத்த மாநகராட்சி திட்டமிட்டுள்ளது என்றனர்.

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE months thereafter.I **SIDDHARTH SUKUMAR** S/o M. N. Sukumar Nambiar, Aged 38 years, Permanently residing at New No. 47 Old No. 25 TTK Road, Alwarpet, Chennai-18 intend having my enrollment as an **Advocate** moved before the **Bar Council of Tamilnadu**, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

SIDDHARTH SUKUMAR

மேதகு கடன் வசூல் தீர்ப்பாயம் மதுரை
O.A.No.730/21

கனரா வங்கி
விருதுநகர் கிளை,
மதுரை அதன் பிரதிநிதித்துவம்
தலைமை மேலாளர் —வாதி
—எதிர்—
1.திரு.ச.தெய்வேந்திரன்,
S/o.திரு.ரீனிவாசன்,
எண்.1/31,எலிங்க நாயக்கன் பட்டி,
செங்குந்திரபுரம் அஞ்சல்,
விருதுநகர் மாவட்டம்-626 103
2.திரு.அ.திருப்பதி ராஜ்,
S/o.திரு.அலெக்ஸ் பாண்டியன்,
கதவு எண்.2/1 துரைச்சாமி ரெட்டி
2வது தெரு,வி.ஏ.நகர்,கொரட்டூர்,
திருவள்ளூர் மாவட்டம்-600 060.
3.திரு.ஜெ.ரமேஷ்,
S/o.திரு.சி.என்.ஜெய்கர்
கதவு எண்.1402 டாக்போடில் 1
தூதரக குடியிருப்பு, சேரன் நகர்,
பெரும்பாக்கம்
காஞ்சிபுரம் மாவட்டம்-600 100
4.திரு.ராமகிருஷ்ணசாமி,
S/o.திரு.சுகுமார்,
கதவு எண்.28 ராஜ்பாரிஸ்,
சூரிய நகர், மேடவாக்கம்,
காஞ்சிபுரம் மாவட்டம்-600 100
—1,4,6&7வது பிரதிவாதிகள்
மேதகு தீர்ப்பாயத்தின் உத்தரவின் பேரில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.
மேற்படி மனுதாரர் வங்கிக்கு வர வேண்டிய கடன் தொகையின் வட்டி செலவு தொகையுடன் வருவிக்கும் பொருட்டு மேற்படி வாதி வங்கியினால் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் மேற்படி வழக்கில் மேற்சொன்ன பிரதிவாதி மேற்படி தீர்ப்பாயத்தில் ஆஜராவதற்காக வருகிற 30.07.2024 தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே 30.07.2024 அன்று மேற்படி தீர்ப்பாயத்தில் (எண்.4/162 மதுரை-மேலூர் ரோடு, கல்யாணி டவர்ஸ் 3 & 4வது மாடி, உத்தங்குடி மதுரை-625107) காலை 10.30 மணியளவில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனை ஏதுமிருப்பின் தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் அன்றைய தினம் சமூகம் தீர்ப்பாயத்தினால் நகந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
பேமதன் அலெக்சாண்டர்,
வழக்கறிஞர்,
பிளாட் எண்.327,மகாத்மா பள்ளி மேற்கு கேட் அருகில்,கே.கே.நகர்,மதுரை-20.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இனமை! புதுமை! இனிமை!

TAMILNADU MINERALS LIMITED
(An Undertaking of Government of Tamil Nadu)
No.31, Kamarajar Salai, Chepauk, Chennai - 600 005. Phone: 044-29862018 / 28511972
e-mail: tamin@taminganites.com Website: www.taminganites.com
Tender Notice No.601/P5/2024 **NOTICE INVITING e-TENDER** Dated: 15.07.2024
Only through E-tendering Mode
E-Tendering Portal: https://tntenders.gov.in
Online tenders are invited in two cover system for the following tender.

1.	Description of work	e-Tender with reverse bidding for excavation of Silica Sand systematically by engaging own excavator and loading into own Lorries send to Ennore, Chennai from TAMIN, Mudaliyarkuppam SF.No.319/1 & 319/5 Silica Sand Mines, Cheyyur Taluk, Chengalpattu District
2	Tender No. & Date	601/P5/2024, Dated: 12.07.2024
3	Tender ID	2024_TNMIN_463065_1
4	Bid Submission End Date	31.07.2024 up to 16.00 hrs.
5	Technical Bid Opening Date	01.08.2024 at 16.00 hrs
6	Financial Bid Opening Date	Will be intimated later on through Tamil Nadu Government's e-Tender portal
7	Tender Form Fee / EMD	Rs.1000/- (Non refundable) & Rs.1,18,000/- (Rupees one lakh eighteen thousand only) online pay only.

DIPR/2342/TENDER/2024 **GENERAL MANAGER (FINANCE)**

TAMIL NADU FISHERIES DEVELOPMENT CORPORATION LIMITED
(A Government of Tamil Nadu Undertaking)
Integrated Office Complex for Animal husbandry & Fisheries Department, No.571, 4th Floor, Anna Salai, Nandanam, Chennai - 600035.
R.C.No.651/S4/2023 **'E' - TENDER NOITCE** Dated: 15.07.2024
The Managing Director, TNFDC Ltd., invites E Tenders for construction of 10MT Block Ice plant facilities in Arucottuthruai at Nagapattiam District. The Tender Documents and other details will be available in the Government website **https://tntenders.gov.in.** if any changes/corrections in the tender. it will be published in the above Government website only.
DIPR/2334/Tender/2024 **Sd./- MANAGING DIRECTOR**

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
(முன்னர் கந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115, இணையதளம் : www.tvsholdings.com
மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com CIN : L35999TN1962PLC004792
62வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு
கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட கற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, அதன்கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜர் ஆகாமல் காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 62-வது வருடாந்திர பொதுக்கூட்டம் **வியாழக்கிழமை, ஆகஸ்ட் 8, 2024, அன்று மாலை 3.15 மணிக்கு (இந்திய நேரப்படி)** பொதுக்கூட்டம் பற்றிய மே 9, 2024 தேதியிட்ட அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.
இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் www.tvsholdings.com டிஸ்இ லிமிடெட் www.bseindia.com மற்றும் தேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் www.nseindia.com இணையதளத்திலும் தேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்) இணையதளத்திலும் www.evoting.nsdl.com பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட கற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்திடமோ / டெபாசிட்டரிகளிடமோ தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து பங்குதாரர்களுக்கும் பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை 2023-24 மின்னஞ்சல் மூலம் ஜூலை 15, 2024 அன்று அனுப்பப்பட்டுள்ளது.
வரையறுக்கப்பட்ட நாளான வியாழக்கிழமை ஆகஸ்ட் 1, 2024 அன்று காகித வடிவில் / மின்னணு முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் 62-வது ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள சாதாரண வர்த்தகங்கள் குறித்தான தீர்மானங்களுக்கு மின்னணு முறையில் அல்லது NSDL (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.
அனைத்து அங்கத்தினர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்;
1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண வர்த்தகங்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படும்.
2. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: திங்கட்கிழமை, ஆகஸ்ட் 5, 2024 காலை 9 மணி (இந்திய நேரப்படி).
3. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: புதன்கிழமை, ஆகஸ்ட் 7, 2024 மாலை 5 மணி (இந்திய நேரப்படி).
4. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு புதன்கிழமை, ஆகஸ்ட் 7, 2024 மாலை 5 மணிக்கு (இந்திய நேரப்படி) மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்க இயலாது. அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் மின்னர் அதை மாற்ற முடியாது.
6. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தன்று தொலைதூர மின்னணு மூலமாக வாக்களிக்கும் வாக்களார் பட்டியல் விழாக்கிழமை, ஆகஸ்ட் 1, 2024 அன்று வரையறுக்கப்படும்.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டதின் வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது einward@integratedindia.in-ல் விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாளச் சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் அவர்கள் NSDL-ல் தொலைவில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்காத அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்ட தினத்தன்று தொலைதூர மின்னணு மூலமாக வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னணு முறையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்ட தினத்தன்று மின்னணு முறையில் வாக்களிக்க முடியும்.
11. M/s. B. சந்திரா & அசோசியேட்ஸ், தொழில் முறை கம்பெனி செயலாளர் அவர்களை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை நேர்மையான மற்றும் ஒளிவுமறைவு இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளார்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகமிருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லது 1800-1020-990 மற்றும் 1800-2244-30 என்ற இலவச தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மின் வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை Ms. பல்லவி மாத்ரே, மேலாளர் - NSDL, மின்னஞ்சல் : evoting@nsdl.co.in அவர்களிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து தெரிந்து கொள்ளவும்.
13. கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் நகல்களை einward@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வருடாந்திர பொதுக்கூட்ட அறிக்கையின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம், பங்கு சான்றுகளின் நகல் (முன் மற்றும் பின் பக்கம்), கை சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்டபான் மற்றும் கம்பெனியிடம் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை சுயசான்றளிக்கப்பட்டு, ஸ்கேன் செய்யப்பட்ட நகலை இணைக்க வேண்டும்.
14. கம்பெனியிடம் ஏற்கனவே தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அவற்றை பதிவு செய்வது குறித்து கம்பெனியானது ஜூலை 2, 2024 அன்று ஒரு அறிவிப்பை வெளியிட்டது.
15. சரியான நேரத்தில் தகவல்களை பெற மின்னஞ்சல் முகவரியை கம்பெனி மற்றும் டெபாசிட்டரி பார்ட்டிசிபெண்ட்டுகளுடன் பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குநர் குழு ஆணையின்படி
R. ரஜுர பிரகாஷ்
கம்பெனி செயலாளர்
சென்னை
ஜூலை 15, 2024

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல்: crmd@cityunionbank.in,
போன்: 0435-2432322, கபேக்ஸ்: 0435-2431746
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி பெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு
சிட்டி யூனியன் வங்கியின் கடனாளர்கள் / ஜாமீனதாரர்களாகிய 1,M/s முத்து ஹார்ட்வேர்ஸ் மற்றும் எலக்ட்ரிகல்ஸ், எண்:149, வாலாஜாபாத் மெயின் ரோடு, வெங்குபனசேரி, காஞ்சிபுரம் - 601301. 2.தி